DINAMALAR 10 AUG 2010

# மாவட்ட எறிபந்து போட்டி டி.என்.ஜி.ஆர்., ஈஷா வெற்றி

கோவை, ஆக.10-

மாவட்ட பள்ளிகளுக்கான எறிபந்து போட்டியில், 19 வயது மாணவர் பிரிவில் டி.என்.ஜி.ஆர்., பள்ளியும், மாணவியர் பிரிவில் ஈஷா ஹோம் பள்ளியும் சாம்பியன் பட்டம் வென்றன.

கோவை மாவட்ட த்ரோபால் சங்கத்தின் சார்பில் ஐந்தாவது சீனியர் மற்றும் இரண்டாவது சப்ஜூனியர் மாணவ, மாணவியருக்கான த்ரோபால் போட்டி வரதராஜ புரம் காந்தி நூற்றாண்டு நினைவு நடுநிலை பள்ளியில் நடந்தது. மாவட்ட அளவில் 27 பள்ளிகளை சேர்ந்த மாணவ, மாணவியர் 14 வயது, 19 வயது பிரிவு போட்டிகளில் பங்கேற்றனர்.

மாணவர் 19 வயது சீனியர் பிரிவில், டி.என்.ஜி. ஆர்.,பள்ளி முதலிடமும், சாமி சிவானந்தா பள்ளி இரண்டாவது இடமும், கே.பி.எம்.,மெட்ரிக் மேல் நிலை பள்ளி மூன்றாவது இடமும், எல்.ஜி., மெட்ரிக் மேல்நிலை பள்ளி நான்காவது இடமும் பெற்றன.

மாணவியர் 19 வயது சீனியர் பிரிவில், ஈஷா ஹோம் பள்ளி முதலிடமும், பி.எஸ்.ஜி.ஆர்., கிருஷ்ணம்மாள் மெட்ரிக் மேல்நிலை பள்ளி இரண்டாவது இடமும் பெற்றன. எல்.ஜி.,மெட்ரிக் பள்ளி மூன்றாவது இடமும், மேட்டுப்பாளையம் எல்.ஈ.எப்., பள்ளி நான்காவது இடமும் பெற்றன.

மாணவர் 14 வயது சப் ஜூனியர் பிரிவில் ஈஷா ஹோம் பள்ளி முதலிடமும், எல்.ஜி.,பள்ளி இரண்டாவதாகவும், நேஷனல் மாடல் பள்ளி மூன்றாவது இடமும் பெற்றன. மாணவியர் 14 வயது சப் ஜூனியர் பிரிவில் கே.ஜி.,பள்ளி முதலிடமும், எல்.ஜி., பள்ளி இரண்டாவது இடமும், நேஷனால் மாடல் பள்ளி மூன்றாவது இடமும், சாமி சிவானந்தா பள்ளி நான்காவது இடமும் பெற்றன.

ஹோண்டா எலக்ட்ரானிக்ஸ் நிறுவன உரிமையாளர் உமா பரிசளித்தார். கோவை மாவட்ட த்ரோபால் சங்க தலைவர் கருணாநிதி, ரீடைல் யுனினார் மேலாளர் சந்திர சேகர், காந்தி நூற்றாண்டு நினைவு மிடில் பள்ளி தலைமை ஆசிரியர் கருப்பணன் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட த்ரோபால் சங்க செயலாளர் முத்துகிருஷ்ணன் வரவேற்றார்.